[1993 அக்டோபர் 27

26—

விளாத்திக்குளம்-சென்னை சிறப்பு பேருந்து.

*!19775—திருமதி என். கனகவல்லி : மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளாத்திக்குளத்திலிருந்து சென்னைக்குச் செல்ல சிறப்பு பேருந்து ஒன்று இயக்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்கு வரத்துத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : இல்லை.

முற்பகல் 10-35

திருமதி என். கனகவல்லி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் இல்லை என்ற சொல்லுக்கு இடம் இல்லாத இந்த இனிய வேளையில், விளாத்திகுளம் பகுதியில் இருக்கிற வேளாண் பெருங்குடி மக்கள் திருச்சி, சென்னை போன்ற பகுதிகளுக்குச் செல்வதென்றால் இரண்டு, மூன்று பேருந்துகள் மாறிச் செல்ல வேண்டியிருக்கிறது. மேலும், திருவொற்றியூர், தண்டையார்ப்பேட்டை போன்ற பகுதிகளில் விளாத்திகுளம் தொகுதியைச் சார்ந்த மக்கள் அதிகமாக வாழ்வதாலும், நானே சட்டமன்றக் கூட்டத் தொடருக்கு வருவது என்றால் அருப்புக்கோட்டை அல்லது கோவில்பட்டி போன்ற பகுதிகளுக்குப் போய்த்தான் வண்டி ஏற வேண்டிய சூழ்நிலைமை இருப்பதாலும், விளாத்திகுளத்திலிருந்து சென்னைக்கு ஒரு சிறப்புப் பேருந்தை இயக்க, அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இல்லை என்ற சொல்லுக்கே இடம் இல்லை என்று குறிப்பிட்டுக் காட்டி பேருந்து விளாத்திகுளத்திலிருந்து இயக்கப்பட வேண்டும் என்று கேட்டு இருக்கிறார்கள். தடம் எண். 171-தூத்துக்குடியிலிருந்து சென்னைக்கு வருகின்ற பேருந்து, விளாத்திகுளம் வழியாகத்தான் இப்பொழுது வந்து கொண்டிருக்கிறது மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை ஒரு மாத காலத்திலே நிறைவேற்றுவதற்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 27, திரு. எம். பூராசாமி, மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்.